# கருஞ்சட்டைத் தமிழர்

மாதம் இருமுறை

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

• மலர்:6 இதழ்: 20 • திருவள்ளுவர் ஆண்டு 2047 • டிசம்பர் 1-15, 2016 • விலை:ரூ.5 • Volume:6 Issue:20 • December 1-15, 2016 • Price:Rs.5


## ரூபாய்த் தாள்கள் செல்லாது
## நாட்டில் எங்கும் குமுறல், கொந்தளிப்பு



திராவிட இயக்கத் தமிழர் பேரவை

நடத்தும்

# ஊர்திப் பரப்புரைப் பயணம்

புதிய கல்விக் கொள்கை

பொது சிவில் சட்டம்

ஆகியனவற்றை எதிர்த்து

தமிழகமெங்கும்

ஊர்திப் பரப்புரைப் பயணம்

2016 டிசம்பர் 7,8 – சிவகங்கை மாவட்டம்

7.12.2016 – காலை 10 மணிக்கு

திருப்பத்தூர் பேருந்து நிலையம் அருகில்

பயணம் தொடக்கம்

தி.மு.க. மாவட்டச் செயலாளர்

**பெரியகருப்பன்**

தொடக்கி வைக்கிறார்

பேராசிரியர் **சுப.வீரபாண்டியன், புலேந்திரன்**

மற்றும் பேரவைத் தோழர்கள்

பயணத்தில் பங்கேற்கின்றனர்.



# சுபவீ பேசுகிறார்

**டிசம்பர் 2**

மாலை 6 மணி

பெரியார் திடல்

ஆசிரியர் பிறந்தநாள் விழா

**டிசம்பர் 5**

மாலை 6 மணி

பென்னமராவதி


பொதுக்கூட்டம்

**டிசம்பர் 16**

சென்னை கவிக்கோ அரங்கம்

கருத்தரங்கம்

“திப்பு சுல்தான்”



## திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பயிலரங்கம்

பேரவையின் மாநிலப் பொறுப்பாளர்களுக்கான **‘தத்துவமும் நடைமுறையும்’** குறித்த பயிலரங்கம் 27.11.2016 அன்று சேலத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியனின் இரண்டு மணி நேர உரை, டிசம்பர் முதல் வாரத்தில் காணொளிப் படமாக (DVD) வெளிவர உள்ளது.






தமிழர் தலைவர் பிறந்தநாளில்

அவருடைய சமூகத் தொண்டு,

பகுத்தறிவுப் பணி

மேலும் சிறக்க



வாழ்த்தி மகிழும்

**அசுரன் நிறுவனத்தார்**


**திருமணி நிறுவனத்தார்**

**இராவணன் நிறுவனத்தார்**

**சென்னை-63**

**94440 20910**

# எது மூன்றாவது ‘பெரிய’ கட்சி?



சுப.வீரபாண்டியன்

தஞ்சை, அரவக்குறிச்சி, திருப்பரங்குன்றம் ஆகிய தொகுதிகளின் இடைத்தேர்தல் முடிவுகள் பல செய்திகளை நமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றன. ஆனால் ஊடகங்கள் பலவும், உண்மையல்லாத ஒரு செய்தியினைப் பெரிதுபடுத்துகின்றன. தமிழ்நாட்டில், பா.ஜ.க., மூன்றாவது பெரிய கட்சியாய் உருவெடுத்துள்ளது என்பதுதான் அந்த உண்மைக்கு மாறான செய்தி!

தேர்தல் முடிவுகளைச் சற்றுக் கூர்மையாகக் கவனித்தால் எது உண்மை என்று நமக்குப் புலப்படும். தஞ்சாவூரில் 1,86,444 வாக்குகள் பதிவாகியுள்ளன. அவற்றுள் பா.ஜ.க. பெற்றிருப்பது 3,806 வாக்குகள் மட்டுமே. தே மு.தி.க.1534 வாக்குகளையும், பா.ம.க. 794 வாக்குகளையும், நாம் தமிழர் கட்சி 729 வாக்குகளையும் பெற்றுள்ளன. நோட்டாவிற்கு 2,295 வாக்குகள் விழுந்துள்ளன. அப்படிப் பார்த்தால், நான்காவது 'பெரிய' கட்சி நோட்டாதான்.

அரவக்குறிச்சியில் 1,64,582 வாக்குகள் பதிவாகியுள்ளன. அவற்றுள் பா.ஜ.க. 3,162 வாக்குகளையும், தே.மு.தி.க. 1513 வாக்குகளையும், பா.ம.க. 995 வாக்குகளையும், நாம் தமிழர் 482 வாக்குகளையும் பெற்றுள்ளன. நோட்டாவுக்கு 1,538 வாக்குகள் கிடைத்துள்ளன. இங்கும் நோட்டாதான் 4ஆவது இடத்தில் உள்ளது.

திருப்பரங்குன்றம் தொகுதியில் மொத்தம் 2,03,098 வாக்குகள் பதிவாகியுள்ளன. அவற்றுள் பா.ஜ.க. பெற்றிருப்பது 6,930 வாக்குகள். தே .மு.தி.க. 4,105 வாக்குகளும், நாம் தமிழர் 568 வாக்குகளும் பெற்றுள்ளன. நோட்டாவுக்கு 2,214 வாக்குகள் கிடைத்துள்ளன. ப.ம.க. அங்கு போட்டியிடவில்லை.

ஒவ்வொரு தொகுதியிலும் தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளும் 92 முதல் 95 விழுக்காடு வாக்குகளைப் பெற்றுவிட்ட பின்னர், மீதமுள்ள 58 சதவீத வாக்குகளைத்தான் அனைத்துக் கட்சிகளும், சுயேட்சைகளும், நோட்டாவும் பகிர்ந்து கொண்டுள்ளன. சிலவிடங்களில் சில சுயேட்சைகள் இவர்களை விடக் கூடுதல் வாக்குகளைப் பெற்றுள்ளனர். இதுதான் இந்தக் கட்சிகளுக்கு மக்களிடம் உள்ள செல்வாக்கு. இதனை வைத்துக் கொண்டுதான், இரண்டு திராவிடக் கட்சிகளுக்கும் மாற்று நாங்கள்தான் என்று சற்றும் வெட்கப்படாமல் கூறிக்கொண்டுள்ளனர். புதுவையில் நாம் தமிழரின் நிலை மிகவும் மோசம். அங்கு அவர்கள் வாங்கியுள்ள வாக்குகள் வெறும் 90 மட்டுமே.

இதில் பா.ஜ.க. நாங்கள்தான் மூன்றாவது பெரிய கட்சி என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டுள்ளனர். மூன்று தொகுதிகளிலும் அவர்கள் மூன்றாவது இடத்தில் இருப்பது உண்மைதான். ஆனால் அது ஏணி வைத்தாலும் இரண்டாவது இடத்தைக் கூட எட்ட முடியாத மூன்றாவது இடம். இந்தத் தேர்தலில், வேறு பல காட்சிகள் போட்டியிடாத நிலையில், மூன்றாவது இடத்தில் உள்ள கட்சி என்பது வேறு, மூன்றாவது பெரிய கட்சி என்பது வேறு. 'பெரிய' என்னும் சொல்லுக்கு என்ன பொருள் என்பதே நமக்கு விளங்கவில்லை.

திருப்பரங்குன்றம் தொகுதியில் பா.ஜ.க. 6,930 வாக்குகள் வங்கியிருக்கிறதே என்று வியப்படைய வேண்டாம். அங்கு நடந்தது இடைத்தேர்தல். ஆறு மாதங்களுக்கு முன் அதே தொகுதியில் நடந்த பொதுத் தேர்தலில் அக்கட்சி வாங்கியிருந்த வாக்குகள் 7,698. ஆறு மாதங்களில் அக்கட்சியின் வாக்குகளில் 768 வாக்குகள் குறைந்துள்ளன என்பதுதான் உண்மை. மற்ற இரு தொகுதிகளிலும் பொதுத் தேர்தல் நடைபெறவில்லை. எனவே ஒப்பிட்டுப் பார்க்க இயலவில்லை.

மத்தியில் ஆட்சியில் இருக்கின்ற, நிதிவலிமை, அமைப்பு வலிமை எல்லாம் பெற்றுள்ள ஒரு கட்சி சில ஆயிரங்கள் வாக்குகளைத்தான் பெற முடிகிறது என்பது அவமானமே தவிர, பெருமை இல்லை.

இந்த இடைத்தேர்தல் சொல்லியுள்ள வேறு சில உண்மைகளையும் நாம் பார்க்க வேண்டும். "நான் கிங் ஆகணுமா, கிங் மேக்கர் ஆகணுமா" என்று பொதுத்தேர்தலில் கேட்டுக்கொண்டிருந்த விஜய்காந்தைப் பார்த்து மக்கள், "நீங்கள் ஒன்றும் ஆக வேண்டாம், சும்மா இருந்தால் போதும்" என்று இப்போது தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். மூன்று தொகுதிகளில் ஒன்றான திருப்பரங்குன்றம், விஜயகாந்தின் சொந்த ஊரான மதுரைக்கு அருகில் உள்ள தொகுதி என்பதாலும், அவரே நேரில் வந்து ஆதரவு கேட்ட தொகுதி என்பதாலும், அங்கு வாக்குகள் சற்றுக் கூடுதலாகக் கிடைக்க வாய்ப்புண்டு என்ற எண்ணம் பலருக்கும் இருந்தது. ஆனால் அங்கும் பதிவான இரண்டு லட்சத்திற்கும் கூடுதலான வாக்குகளில், 5,000 வாக்குகளைக் கூட அக்கட்சியால் பெற முடியவில்லை.

'முதல்வர் வேட்பாளர்' அன்புமணியின் கட்சி போட்டியிட்ட இரண்டு தொகுதிகளிலும் ஆயிரம் வாக்குகளைக் கூட வாங்க முடியவில்லை. நாம் தமிழர் கட்சியின் நிலைமை குறித்து யாரும் பேசவில்லை. பேசுகின்ற நிலைக்குக் கூட அது வரவில்லை.

தனித்தனியாக எல்லாக் கட்சிகளும் தமிழ்நாட்டில் போட்டியிட்டால், இன்றும் மூன்றாவது இடத்திற்கு வர காங்கிரஸ் கட்சிக்கே வாய்ப்புள்ளது. அப்போதும் கூட, மூன்றாவது 'பெரிய' கட்சியாக அது வருவதற்கில்லை. தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரு காட்சிகளையும் தாண்டி, மூன்றாவது பெரிய கட்சி என்று ஏதும் இன்று தமிழகத்தில் இல்லை. இந்த உண்மை சிலருக்குப் பிடிக்கலாம், சிலருக்குப் பிடிக்காமல் போகலாம். ஆனால் உண்மை இதுதான்!

●

# செல்லாத நோட்டும் சிக்கித் தவிக்கும் மக்களும்




**பழனிவேல் தியாகராசன்**
சட்டமன்ற உறுப்பினர்

பொருளாதாரத்தில் பணப் பரிவர்த்தனைகளின் அளவைக் குறைப்பதால் பல சமூக, பொருளாதார, நிர்வாகப் பலன்களை அளிக்கும். பணப் பரிவர்த்தனைகளும் வரி ஏய்ப்பு பரிவர்த்தனைகளும் மிக அதிக அளவில் உள்ள இந்தியா போன்ற நாடுகளுக்கு இது மிகவும் பொருந்தும்.

எனவே இப்போது உள்ள பிரச்சினை இந்த நடவடிக்கையின் நோக்கம் இலக்குகள் ஆகியவை சரியானவைதானா என்பதை விட அரசுக்கு எந்த இலக்குகள் முனனுரிமையாக உள்ளன என்பதாகும். இதுவரை தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ள நான்கு இலக்குகள் உள்ளன:

1. பணப்பரிவர்த்தனைகள் இல்லா வங்கி முறைப்படுத்தப்பட்ட பொருளாதாரம்.
2. கருப்புப் பணம் வைத்திருப்பவர்களைப் பிடித்து உரிய வரிப் பாக்கிகளை வசூலித்தல்.
3. தற்போது புழக்கத்தில் உள்ள கள்ள நோட்டுகளைக் கைப்பற்றுதல்.
4. பயங்கரவாத அமைப்புகள்(?) ஆதரவாளர்களிடம் உள்ள உண்மையான கள்ளப் பணங்களைச் செல்லுபடியாக்காமல் செய்தல்.

ரூ.500, ரூ.1000 நோட்டுகள் செல்லாது என்று அறிவிக்கும் சிக்கலான நடவடிக்கையைச் செயல்படுத்துவதற்கு ஆயிரம் வழிமுறைகள் உண்டு. மிகச் சரியாண அணுகு முறையைக் காண இந்த இலக்குகளின் முன்னுரிமைகளைப் புரிந்து கொள்வது அவசியமாகும். பல்வேறு வழிமுறைகளை விவாதிக்கலாம் என்ற போதும், ரகசியம் காத்தல், சிக்கலற்ற முறையில் நிறைவேற்றுதல் ஆகியவை முதன்மையானவையாகும்.

இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானவையாகும். ஒரு புறம் கருப்புப் பணம், கள்ளப்பணம், பயங்கரவாதிகள் நிதி ஆகியவற்றை பதுக்கிவைத்திருப்பவர்களைப் பிடிப்பது முதன்மையான இலக்காக இருந்தால் ரகசியம் காப்பது மிக முக்கியமானது ஆகும் இருப்பினும் இதற்காக மிகவும் ரகசியமாக வைத்திருக்கும் அணுகுமுறையை நடைமுறைப்படுத்தும் போது அதன் பாதிப்புகளை மக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையானவர்கள் சந்திக்க நேரிடும்.

ஒரு புறம்,சிக்கலற்ற முறையில் நிறைவேற்றுதல், அதுநடை முறைப் படுத்தப்படும் நீண்ட காலத்தில் மக்கள் தொகையில் மிகப் பெரும் பான்மையானவர்களுக்கு அசவுகரியத்தைப் பெருமளவு குறைக்கும் ஆனால் இதில் கருப்புப்பணப் பதுக்கல்காரர்கள் எச்சரிக்கை ஆகிவிடுவர். இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்பு இருந்த நிலைமையின் சில அடிப்படை அம்சங்களைப் பரிசீலிப்போம்.

1. மொத்தமாக பழக்கத்தில் இருந்த ரூபாய் நோட்டுகளில் ரூ.500, ரூ.1000 நோட்டுகள் ஏறத்தாழ 80 சதவீதம் ஆகும்.
2. விவசாயம், மீன் பிடித்தல் சில்லரை வணிகம் போன்ற பல துறைகளில் பணப்பரிமாற்றம் மட்டுமே செய்யப்படுகிறது.
3. பெரும்பாலான குடிமக்களுக்கு எ.டி.எம். அல்லது டெபிட் கார்டுகள் கேஷ் கார்டுகள் காசோலைகள் போன்ற மாற்றுப் பரிவர்த்தனை முறைகள் கிடைக்கவில்லை. அவற்றில் அனுபவமும் இல்லை.
4. இப்படிச் செல்லாது என்று அறிவிக்கப்பட்ட நோட்டுகளின் வாங்கும் சக்தி அதிகமாக உள்ளதால் அவற்றை மேல் தட்டுமக்கள் மட்டுமே பயன்படுத்துகிறார்கள் என்று கூறமுடியாது: உதாரமணாக வீட்டு வேலை செய்பவர்களுக்குக்கூட சில ஆயிரம் ரூபாய் மாத ஊதியம் என்பதால் இந்த நோட்டுகளில் கொடுக்கப்படலாம்.
5. முதியவர்கள் ஓய்வூதியம் மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை, வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் போன்ற மத்திய மாநில நல்வாழ்வுத் திட்டங்களிலும் சமுதாயத்தில் அடித்தட்டு மக்களிடம் இத்தகைய நோட்டுகள் சென்றடையலாம். இந்த நிலைமையில் சிக்கலற்ற முறையில் நிறைவேற்றுதலைக் கைவிட்டு ரகசியம் காத்ததுக்கு முன்னுரிமை அளிக்கும் நிலைக்கு எதிரான வாதம் எடுபடுகிறது. ரகசியம் காத்தலின் பெரும் பாதிப்புகளை அனைத்துப் பொருளாதாரப் பிரிவுகளிலும் உள்ள மக்கள் தொகையின் பெரும் பகுதியினர் அனுபவிக்க வேண்டியுள்ளது.

பாதிப்புகளை மட்டும் பாராது பயன்களையும் பார்க்க வேண்டும் என்று கூறப்படுகிறது. ரகசியம் காத்தலின் பாதிப்புகள் மிக அதிகமாக இருந்தால் பயன்கள் என்ன?

பரம ரகசிய அணுகுமுறையை அரசுகையாண்டுள்ளதால், கருப்புப்பணம், பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி அளிக்கும் அமைப்புகள் ஆகியவற்றை பிடிப்பதாலும் கள்ள நோட்டுகளைக் கைப்பற்றி அழிப்பதாலும் பெரும் பலன்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இது எவ்வளவு தூரம் சாத்தியப்படும்? மேலும் முக்கியமாக இத்தகைய பரமரகசிய நடவடிக்கை இந்த நோக்கங்களை அடைய சரியாண அணுகு முறையா ?

**கீழ்க்கண்டவற்றைப் பரிசீலிப்போம்.**

1. 2014ம் ஆண்டு சிறப்புப் புலனாய்வு அறிக்கையில் அரசே கூறியது என்னவென்றால், கருப்புப் பணசொத்துகளில் 5 சதவீதம் மட்டுமே இந்திய ரூபாய் நோட்டுகளாக உள்ளன. இந்தசொத்துகளில் மிகப்பெரும் பகுதி நிலம், கட்டிடங்கள், பட்டியலிடப்பட்ட மூலதனங்கள், பட்டியலிடப்படாத மூலதனங்கள் ஆகிய வடிவங்களிலும், வெளிநாடுகளில் பல்வேறு நாட்டு பணங்களாகவும் சர்வதேச வங்கிகளிலும் உள்ளன.
2. நாட்டில் புழக்கத்தில் உள்ள கள்ள நோட்டுகளின் அளவுகள் குறித்து அவ்வளவு சிரத்தை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. ஒரு வேளை காஷ்மீர் போன்ற எல்லைகளில் மாநிலங்களில் இருக்கலாம். இந்த ஆண்டு தொடக்கத்தில் நாடாளுமன்றத்தில் நிதி அமைச்சர் இதன் அளவு 0.02 சதவீதம் என்று தெரிவித்தார்.
3. வரலாற்றில் உலக அளவிலேயெ அரசுகளின் இத்தகைய முயற்சிகளுக்கு

பலன்கள் குறைவேயாகும். இந்தியாவில் மிகமிகக் குறைவாகும். இந்தியாவில் பணமும் செல்வாக்கும் படைத்தவர்கள் பொறிகளிலிருந்து தப்பிக்க வழிகண்டு பிடித்துவிடுவார்கள். மாட்டிக் கொள்பவர்கள் சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்தான்.

ஏற்படக் கூடிய பாதிப்புகள், அடையக் கூடிய பலன்கள் ஆகிய இரண்டையும் பரிசீலித்தால் மக்கள் தொகையின் பெரும் பகுதியை மோசமாகப் பாதிக்கக் கூடிய பெரும் பொருளாதார பாதிப்புகளைப் புறந்தள்ளிவிட்டு பரம ரகசிய முறைக்காக வாதம் செய்வது சிரமமாகும்.

இதற்குச் சரியான அணுகுமுறையை மேற்கொள்வதற்கு மாறாக, அரசியல், தேர்தல் போன்ற இதர நோக்கங்கள் இந்த முடிவை எடுக்கக் காரணமாக இருந்திருக்கலாம். ரூபாய் நோட்டுகள் பயன்பாட்டைக் குறைப்பது போன்ற சாத்தியமற்ற விவகாரங்களை விவாதிப்பதை விட இந்த முடிவை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதன் விளைவுகள் ஆகியவை பற்றிக் காணலாம்.

கோடிக்கணக்கான மக்கள் ஏற்கனவே ஏராளமான இடையூறுகளைச் சந்தித்துவிட்டனர். இந்நிலையில் மக்களின் வாழ்க்கையில் பொருளாதாரச் சிக்கல்கள், இடையூறுகள் ஆகியவற்றைக் குறைக்க என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்?

முதலாவதும் மற்றும் மிக முக்கியமானதும் என்னவென்றால், அரசிடமிருந்து வெளியாகும் தகவல்களின் உள்ளடக்கமும், காலமும் மாறவேண்டும். மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதை விட அதிர்ச்சியையும், ஆச்சர்யத்தையும் அளிக்கவே தகவல்கள் வெளியிடப்படுகின்றன. பிரதமர் அலுவலகத்தின் அதிமேதாவிகள் வெளியிடும் செய்திகளான "நள்ளிரவில் சட்டவிரோதப் பணம் கட்டுதல்" 2.5 லட்சம் ரூபாய்க்குமேல் விடாது தொடரப்படும்" போன்றவை சமுதாயத்தில் கல்வி அறிவு குறைவானவர்கள், தகவல் தொடர்பு குறைவானவர்கள் ஆகியோருக்கு கிலியையும், அச்சத்தையும், ஏற்படுத்தும். இத்துடன் வாட்ஸ் அப் போன்றவற்றால் ஏற்படுத்தப்படும் புரளிகள் வேறு!

நாட்டுக்குள்ளேயே வங்கிகள், பெட்ரோல் பங்குகள், ரயில்வே நிலையங்கள் போன்ற இடங்களில் சட்டபூர்வ செலாவணி என்றும் மற்ற இடங்களில் செல்லாது என்றும் அறிவிக்கப்படுவதைச் சாதாரணமக்கள் எப்படி எடுத்துக் கொள்வார்கள் ?

மற்றொரு பக்கத்தில், ரூபாய் நோட்டுகளில் முழுமதிப்பும் தக்கவைக்கப்படும். வங்கிகளில் பணம் எடுப்பதில் சலுகை, பயன்பாட்டுத் தேதி நீட்டிப்பு போன்ற செய்திகள் இந்த தகவல்கள் அவசியம் சென்றடைய வேண்டியவர்களுக்குச் சென்றடைவதில்லை.

மேலும் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படுவதைக் குறைக்கவும் அரைகுறையாகத் தகவல் அறிந்த மக்கள் பணத்தைக் கழிவுக்கு மாற்றுதலை தடுக்கவும் அரசு கடுமையான ஒருங்கிணைப்பு முயற்சியை எல்லாமட்டங்களிலும் எடுக்க வேண்டும். அமைதியையும் நம்பிக்கையையும் உண்டாக்க வேண்டும்.

வங்கிகளின் முன்னால் மணிக்கணக்கில் வரிசையில் காத்திருப்பதையும். தெரு மூலைகளில் தங்கள் பணத்தை கழிவு போக மாற்றிக் கொள்வதையும் குறைத்து அதன் மூலம் சாலை பணப்பரிமாற்றம் செய்பவர்களுக்கு கருப்பு பணம் உருவாவதையும் தவிர்க்கவேணடும்.

மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த நடவடிக்கையின் விளைவுகளைப் போக்க அரசு எந்தக் கட்டுப்பாட்டு அமைப்புகள் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும் என்பதைக் காண வேண்டும்.

உதாரணமாக, ரூ.500 மற்றும் அதற்குக் குறைவான மதிப்பு ரூபாய் நோட்டுகளை மிகப் பெரும் அளவில் அச்சிடுவது மட்டும் போதாது. அவற்றை விநியோகிக்கும் ஏற்பாடுகளான நாடு முழுவது முள்ள 1.25 லட்சம் வங்கிக் கிளைகள், 2.5 லட்சம் ஏ.டி.எம்.கள் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும். பரமரகசியமாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டதால் ஏ.டி.எம்.கள் பலவாரங்கள் செயலிழந்தன. எனவே டிசம்பர் 30 கெடு தேதிக்குள் அவற்றை முழுமையாகச் செயல்படுத்துவது முக்கியமாகும்.

பழைய ரூபாய் நோட்டுகள் செல்லுபடியாகும் மருத்துவமனைகள், பெட்ரோல் மருத்துவமனைகள், பெட்ரோல் பங்குகள் போன்ற இடங்களில் இறுதிக் கெடுநாளுக்குப் பிறகும் தொடர்வதுடன், இச்சலுகையை உரம் மற்றும் விதைகள் விற்பனை, விவசாயம் மற்றும் மீன்பிடித் துறை போன்ற துறைகளில் மொத்த வியாபார பரிவர்த்தனைக்கும் அனமதிக்க வேண்டும். பழைய நோட்டுகளை மாற்றுவதற்கு வங்கிகளின் முன் நீண்ட வரிசையைத் தவிர்க்க தினசரி உச்சவரம்பை ரூ. 5,000 அல்லது 10,000 ஆக உயர்த்தவேண்டும்.

ரூபாய் நோட்டு செலாவணி சிரமமாக இருந்தால் பொருளாதாரத்தின் சிலதுறைகள் ஸ்தம்பிக்கும் ஆபத்து ஏற்படும். போதுமான அளவு புதிய நோட்டுகள் வருவதற்கு முன் பெட்ரோல் பங்குகளில் பழைய நோட்டுகள் வாங்குவது நிறுத்தப்பட்டால், தாங்கள் பிடித்த மீன்களை கொள்முதல் செய்யும் மொத்த வியாபாரிகளிடமிருந்து மீனவர்கள் பழைய நோட்டுகளை வாங்கமாட்டார்கள். இதன் விளைவாக அவர்களால் படகுகளுக்குத் தேவையான டீசல் வாங்கிக் கடலுக்குள் செல்லமுடியாது. சில்லரை வியாபாரிகளுக்கு மீன் கிடைக்காது. அதனால் அவற்றின் விலைகள் உயரும். அல்லது அவற்றைக் கையிருப்பில் வைத்து மீன்கள் அழுகிப் போகும். இதுதான், நிலைமையை உணர்ந்து அரசு பெட்ரோல் பங்குகளில் நவம்பர் 24 வரை பழைய நோட்டுகள் வாங்கப்படும் என்று அறிவிப்பதற்கு முன்பு நவம்பர் 11 முதல் 14 வரைஏற்பட்டது.

இப்போது கேள்வி என்னவென்றால், நவம்பர் 24ந் தேதி வாக்கில் எல்லா இடங்களிலும் புதிய நோட்டுகள் போதுமான அளவுக்கு விநியோகம் செய்யப்பட்டு மீன் பிடித்தொழிலில் இப்பிரச்சினை ஏற்படாமல் இருக்குமா? இதை எப்படி அரசு கண்காணிக்கும்? பிரச்சினை தொடர்ந்தால் நவம்பர் 24க்குப் பிறகும் பெட்ரோல் பங்குகளின் பழைய நோட்டுகள் வாங்கப்படும் என்று அரசு அறிவிக்குமா ?

இந்த அணுகு முறை பொருளாதாரத்தின் அனைத்து துறைகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு, போதுமான அளவு புதிய நோட்டுகள் விநியோகிக்கப்பட வேண்டும் அல்லது அவை வரும் வரையில் பழைய நோட்டுகளின் செலாவணி அனுமதிக்கப்பட வேண்டும்.

முடிவாக, டிசம்பர் 30க்கு மீதமுள்ள நாட்களில் அரசு அச்சுறுத்தும் போக்கை கைவிட்டு, கீழ் மட்டங்களில் பணச் செலாவாணி எளிதாக இருத்தல், சமுதாயத்தில் அனைத்துப் பிரிவினரையும் சென்றடையும் வண்ணம் தகவல் தொடர்பு ஆகியவற்றில் முனைப்பான கவனம் செலுத்தவேண்டும்.

நன்றி: **முரசொலி**

## பிரதமர் மோடியை

டிவிட்டரில் பார்த்து இருப்பீர்கள்



மேடைகளில் பார்த்து இருப்பீர்கள்



வெளிநாடுகளில் கூட பார்த்து இருப்பீர்கள்



இந்திய நாடாளுமன்றத்தில் பார்த்து இருக்கிறீர்களா?

ஆசிரியர்
**சு.ப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

அச்சில் உதவி
**அ.சாதிக் பாட்சா**
**ஜெம் கிராபிக்ஸ்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

# திருநங்கையரைப் போற்றுவோம்



மகளிர் அணி நடத்திய மன நிறைவான விழா

ஆண், பெண் என்னும் இருபாலின மக்களைத் தாண்டி, 'திருநங்கையர்' என்னும் தோழர்களை நம்மில் பலர் எண்ணியும் பார்ப்பதில்லை என்பதே உண்மை. அவர்களின் உலகம் தனி ஒரு உலகமாகவே உள்ளது. அவர்களைக் கேலி பேசுகின்றவர்களாகவே நாம் இருந்தோம். இன்று உலகம் மாறிக் கொண்டிருக்கிறது. நம் சமூகம் நாகரிகம் பெறத் தொடங்கியுள்ளது. அவர்களும் நம்மைப் போன்ற மனிதர்கள், நமக்குள்ள உணர்ச்சிகள், தேவைகள் யாவும் அவர்களுக்கும் இருக்கின்றன என்பதை இப்போது உணரத் தொடங்கியுள்ளோம். அதன் வெளிப்பாடாக, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மகளிர் அணி சார்பில், 20.11.2016 ஞாயிறு மாலை, சென்னை, எழும்பூர், இக்சா மையத்தில், 'திருநங்கையரைப் போற்றுவோம்" என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

மகளிர் அணிச் செயலாளர் தோழர் மகாலட்சுமி தலைமை ஏற்க, தோழர்கள் இரா.உமா, கிரேஸ் பானு, கிருபா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மகளிர் அணியைச் சேர்ந்த தோழர்கள் நித்யா, மகேஸ்வரி, ஜனனி, தென்றல், சபானா ஆகியோரும், இயக்கப் பொறுப்பாளர்கள், தோழர்கள் மு.மாறன், முத்தையா குமரன், தமிழ்மறவன், எட்வின் ஆகியோரும் பங்கேற்றுக் கருத்துரை ஆற்றினார். தோழர் தீபா தொகுப்புரை வழங்கினார். தாம்பரம் இளங்கோ ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டார்.

உமா, இளவரசி ஆகிய புதிய தோழர்கள் இயக்கத்தில் தங்களை பொதுச் செயலாளர் முன் இணைத்துக் கொண்டனர். கருஞ்சட்டைத் தமிழர் இதழுக்கான பத்து ஆண்டுக் கட்டணங்களாக ரூ.15000, சமூக வலைத்தள அணிச் செயலாளர் நித்யாவினாலும், ரூ.3000 மகளிர் அணிச் செயலாளர் மகாலட்சுமியாலும் வழங்கப்பட்டன.

ஆண்களை விடப் பெண்களும், பெண்களை விடத் திருநங்கையர்களும் போராடிப் போராடியே வாழ்வில் முன்னேறியுள்ளனர் என்றும், தங்களின் சொந்தக் குடும்பத்தாராலேயே ஒதுக்கப்பட்டு, பல்வேறு அவமானங்களைக் கடந்து இன்று திருநங்கையர் இந்த இடத்தை அடைந்துள்ளனர் என்றும், ஆணின் வலிமையையும், பெண்ணின் இரக்கமும் உடையவர்கள் திருநங்கையர் என்பதால் இருவரையும் விட மேலானவர்களாக உள்ளனர் என்றும், குழந்தைகள் உரிமை, பெண்கள் உரிமை என்றெல்லாம் தனித்தனியே பார்க்க வேண்டியதில்லை, மனித உரிமையே இங்கு வேண்டுவது என்றும் பல்வேறு கருத்துகள் கருத்தரங்கில் பேசப்பட்டன.

நேற்றுவரை அவர்களைக் கேலி செய்த நாம் பிறகு அவர்களின் மீது பரிவு காட்டினோம். இன்று அதனையும் கடந்து அவர்களுடன் தோழமை பூண்டுள்ளோம். இனி வரும் காலங்களில் நாம் அனைவரும் பால் வேறுபாடுகளைக் கடந்து சமூக மேம்பாட்டிற்கு இணைந்து நடப்போம் என்றார் இயக்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன். ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## மர்மதேசம்...?..!

"என்னமோ நடக்குது, மர்மமா இருக்குது" - பழைய திரைப்படம் ஒன்றின் பாடல்வரி இது.

இப்பொழுது இந்த வரி தமிழக அரசுக்கு மிகப் பொருத்தமாக இருக்கிறது.

என்ன நடக்கிறது என்பது விளங்காத புதிராக இருக்கிறது.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு சாதாரன காய்ச்சல் என்றார்கள். அப்பலோ மருத்துவமனையில் இருக்கிறார் என்றார்கள்.

பின்னர், சில நாள்கள் மருத்துவமனையில் ஓய்வு எடுக்க வேண்டும் என்றார்கள்.

ஓரிரு நாளில் ஐ.சி.யூ-வில் இருக்கிறார் என்றார்கள்.

மூச்சுக்கோளாறு, இதயக்கோளாறு, செயற்கை சுவாசம், கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன என்றார்கள்.

இலண்டன் மருத்துவர், சிங்கப்பூர் மருத்துவர், எய்ம்ஸ் மருத்துவர் வந்தார்கள் என்றார்கள்.

அப்பலோ தலைமை மருத்துவர் ரெட்டி, முதல்வர் உடல் தேறிவிட்டார். எப்போது அவர் வீட்டுக்குப் போக வேண்டும் என்று அவர் நினைக்கிறாரோ, அப்போது அவர் போகலாம் என்றார்.

அடுத்தடுத்து அரை இட்லி சாப்பிட்டார், ஜூஸ் சாப்பிட்டார், காவிரி பற்றிப் பேசினார், அரசு அதிகாரிகளுடன் ஆலோசனை செய்தார் என்றார்கள்.

அடுத்தநாள் அவருக்குப் பேசுவதற்குப் பயிற்சிக் கொடுக்கப்பட்டது என்றார்கள்.

இப்படி எல்லாமே 'என்றார்கள் என்றார்கள்' தானே ஒழிய முதல்வர் என்படி இருக்கிறார் என்பது மர்மமாகவே இன்னமும் இருக்கிறது.

பல்வேறு அரசியல் தலைவர்கள் அப்பலோ மருத்துவமனைக்குச் சென்றார்கள், முதல்வரைப் பார்க்க.

யாரையும் அனுமதிக்கவில்லை முதல்வரிடம்.

மாநில ஆளுநரும் வந்தார் முதல்வரைப் பார்க்க, அவருக்கும் அதே கதிதான்.

இந்திய அரசியல் சாசன சட்டப்படி ஒரு மாநில ஆளுநருக்கு, அம்மாநில முதல்வரைப் பார்க்க முழு உரிமை அல்லது அனுமதி இருக்கிறது.

ஆனாலும் அவரும் திருப்பி அனுப்பப்பட்டார்.

இந்நிலையில், காவிரிப் பிரச்சினை உள்பட பல்வேறு பிரச்சினைகள் இன்று தொய்வாகித் தூங்கிப்போய்க் கிடக்கிறது தமிழகத்தில்.

முன்னர் முதல்வரால் மறுக்கப்பட்ட மத்திய அரசின் திட்டங்கள் இப்பொழுது நடைமுறைக்கு வந்துகொண்டு இருக்கிறது.

இதற்கு யார் அனுமதி கொடுத்தார்கள். இதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள், யார் இயக்குகிறார்கள் என்பது புதிராக இருக்கிறது.

தளபதி ஸ்டாலின் அவர்கள் சொல்வது போல தமிழக அரசு இப்பொழுது செயல்படாத அரசாக இருக்கிறது.

இந்நிலை தொடர்ந்தால் என்னாகும் தமிழகம்.

தமிழ்நாடும் தமிழக அரசும் இப்பொழுது கேள்விக்குறியில் தொங்கிக்கொண்டு இருக்கிறது.

மர்மத்திரை விலகுமா அல்லது தொடருமா?



## மறக்க முடியுமா?

# புலவர் குழந்தை

**எழில்.இளங்கோவன்**

அறிவில் முதிர்ச்சி, உணர்வில் முதிர்ச்சி, புலமையில் முதிர்ச்சி, பாக்களைப் புனைவதில் முதிர்ச்சி – ஆனால், பெயர் மட்டும் குழந்தை, புலவர் குழந்தை.

ஈரோடு நகரத்திற்கு அருகில் 'ஓல வலசு' என்ற சிற்றூரைச் சேர்ந்தவர்.

தாயார் சின்னம்மை, தந்தை முத்துசாமி.

1906ஆம் ஆண்டு ஜூலை 1ஆம் தேதி பிறந்த இவரின் கல்வி, திண்ணையில் தொடங்கி, 1937ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகத்தில் புலவர் பட்டம் பெறுவதில் போய் நின்றது.

இவரின் வாழ்க்கை ஆசிரியர் பணியில் தொடங்கி 37 ஆண்டுகள் தொடர்ந்தன.

பவானி உயர்நிலைப் பள்ளி ஒன்றில் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றினார்.

கவி பாட வேண்டும் என்ற வேட்கை. இளமையில் இசைக்கேற்பப் பாடத் தொடங்கினார். பின்னாளில் மரபில் மடை திறந்தார் கவிதைகளை.

நல்ல பேச்சாளர், கவிவாணர், மொழி உணர்வாளர்.

1938, 1948, 1965 ஆகிய ஆண்டுகளில் நுழைய முயன்ற இந்தி ஆதிக்கத்திற்கு எதிராகக் களம் இறங்கியவர் இவர்.

இவரின் பேச்சும், பாடல்களும் அங்கே உணர்ச்சிப் பெருக்காயிற்று, மக்கள் உணர்வுப் பிழம்பாயினர்.

1946 தொடக்கம் 1958 வரை 'வேளாண்' இதழைத் தொடர்ந்து நடத்திய இதழாளர்.

தந்தை பெரியார் வேண்டுகோளுக்கு இணங்க, சென்னையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில், குறளுக்கு உரை எழுத ஒரு குழு அமைக்கப்பட்டது.

நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் அமைக்கப்பட்ட அக்குழு அறிஞர்களுடன் புலவர் குழந்தையும் இருந்தார்.

புலவருக்குத் திருக்குறள் மீது இருந்த ஆழ்ந்த புலமையால், அவர் 25 நாட்களில் திருக்குறளுக்கு ஓர் அருமையான உரையை எழுதி முடித்தார்.

அது, 'திருக்குறள் குழந்தையுரை' என்று அழைக்கப்பட்டது.

'யாப்பருங்கலக் காரிகை' சற்றுக் கடினமாக இருந்ததால், அதை எளிதாக்கி 'யாப்பதிகாரம்' என்ற நூலை எழுதினார்.

பவணந்தி முனிவரின் நன்னூலை எளிமையாக்கி 'இன்னூல்' என்ற நூலை எழுதியிருக்கிறார்.

'தொடையதிகாரம்' என்பது இவரின் இன்னொரு இலக்கண நூல்.

தொல்காப்பியம் பொருளதிகாரத்திற்கு இவர் எழுதிய முழு உரை 'தொல்காப்பியம் குழந்தை உரை' ஆகும்.

இப்படித் தமிழோடு மட்டும் உறவாடியவர் அல்லர் புலவர் குழந்தை. இவர் தந்தை பெரியாரின் சுயமரியாதைச் சிந்தனையாளர்.

கம்பனோடு போட்டி போட்டவர் குழந்தை.

12 ஆயிரம் பாடல்களைப் பாடினான் கம்பன் – பெயர் ராமகாதை, ராமாயணம்.

3100 பாடல்களைப் பாடினார் புலவர் குழந்தை – பெயர் 'இராவண காவியம்'

இருவரும் கவிப்போரரசர்கள் தாம். ஆனால் கம்பன் ஆரியர்களுக்காகப் பாடினான், ஆரியத்தை நிமிர்த்தப் பாடினான், திராவிடர்களைப் பழித்து.

புலவர் குழந்தை ஆரியரை புறமொதிக்கிப்பாடினார் ஆரியத்தை தோலுரித்துப் பாடினார், திராவிடரை நிமிர்த்தப்பாடினார்.

கம்பன் பாடியது ஆரியத்திணிப்பு.

குழந்தை பாடியது தமிழரின் இனமானம்.

"தமிழ்ப் புலவர்கள் எல்லாம் தமிழரை இழிவுபடுத்தும் புராணக்கதைகளையே பாடிவந்தார்கள். அதற்கு மாறாக இராவண கவியத்தைப் படைத்து இழிவைப் போக்கிய புலவர் குழந்தை அவர்களைப் பாராட்டுகிறேன்" – 1971ஆம் ஆண்டு விழுப்புரத்தில் புலவர் குழந்தையை இவ்வாறு பாராட்டுகிறார் தந்தை பெரியார்.

"இராவண காவியம் பழைமைக்குப் பயணச்சீட்டு. புதுமைக்கு நுழைவுச் சீட்டு" – இராவண காவிய நூலில் அறிஞர் அண்ணாவின் அணிந்துரை வரிகள் இவை

"கம்பனின் இராமாயணத்தை இராவணகவியமாக மாற்றியமைத்ததன் மூலம், செந்தமிழ்ப் பெருமக்களின் சிந்தனைத் தீயை நெய்யூற்றி வளர்த்தார் புலவர் குழந்தை" – புலவர் குழந்தையை ஒரு சிந்தனைத் தீயாக உருவகம் செய்தார் கலைஞர் 1971 இல்.

ஆரியர்களின் சமூக ஆதிக்கப் பண்பாட்டைத் தடுத்து நிறுத்தித் தகர்த்தெறிந்த இராவண காவியம் வெளியான ஆண்டு 1948.

1. தமிழ்க்காண்டம்
2. இலங்கைக் காண்டம்
3. விந்தக் காண்டம்
4. பழிபுரிக் காண்டம்
5. போர்க் காண்டம்

ஆகியவை இராவண காவியத்தின் 5 காண்டங்கள்.

57 படலங்கள், 3100 பாடல்களைக் கொண்ட இராவண காவியத்தின் தலைவர் இனமான இராவணன். எதிரி(ல்) இராமன்.

அவ்வளவுதான்!

இராவணனைத் தலைவனாக்கி, இராமனை வில்லனாக்கினால் விடுமா காங்கிரஸ் அரசு?

அன்றைய காங்கிரஸ் அரசால் அதிரடியாகத் தடை செய்யப்பட்டது புலவர் குழந்தையின் இராவண காவியம்.

தடைக்கு இன்னொரு காரணம் அது திராவிடர்களின் பேரிலக்கியங்களில் ஒன்று.

காலம் மாறியது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் ஏறியது.

திராவிடப் பேரிலக்கியத்தின் தடையைத் திராவிட இயக்க ஆட்சி நீக்கியது – நீக்கியவர் முதல்வர் கலைஞர், ஆண்டு 1971.

அம்மட்டுமன்று,

தொல்காப்பியப் பொருளதிகார உரை, தொல்காப்பியத் தமிழர், திருக்குறளும் பரமேலழகரும், பூவா முல்லை, கொங்குநாடு, தமிழக வரலாறு, கொங்குநாடும் தமிழகமும், அருந்தமிழ் விருந்து, அருந்தமிழ் அமிழ்து, தமிழ் எழுத்துச்சீர்திருத்தம் என 15 உரை நூல்கள் –

அரசியலதிகாரம், காமஞ்சரி, நெருஞ் சிப்பழம், ஆடிவேட்டை, கன்னியம்மாள் சிந்து, புலவர் குழந்தை பாடல்கள் என 13 கவிதை நூல்கள் –

யாப்பதிகாரம், தொடையதிகாரம், இன்னூல் என மூன்று இலக்கண நூல்களை எழுதியவர் புலவர் குழந்தை.

புறநானூற்றில், புலவர் பொன்முடியாரின் "ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே" என்ற பாடலின் வழி,

"தாய்மொழி வளர்த்தல் தமிழர்தங் கடனே
வாய்மொழி புரத்தல் மற்றவர் கடனே
காய்மொழி தவிர்த்தல் கற்றவர் கடனே
ஆய்மொழி உணர்த்தல் அறிஞர் கடனே"

என்று அவர் எழுதிய யாப்பதிகாரத்தில் சொன்ன புலவர் குழந்தை, 1972ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22ஆம் நாள் மறைவு எய்தினார்.

Karunchattai Tamilar. Date of Publication 12th and 28th of Every Month.
Registered with Registrar of News paper for India No: TN TAM/2009/32719, Post Regd No: TN/CH(C)/427/2016-18,
Licenced to post WPP No: TN/PMG(CCR)WPP - 206/2016-18



சிவதி

**புதிய தொடர்**

**இது கணிப்பொறிகளின் யுகம்.
கைபேசிகளிலும் கணிப்பொறி.
கற்றுக்கொள்ள வேண்டிய காலம்.
கவனியுங்கள் இப்புதிய தொடரை!**




## 1

( GOOGLE HANDWRITING INPUT)

Tamil Typing Without Keyboard

தமிழில் உரையாடுவதற்குப் பலபேருக்கு விருப்பம். ஆனால் சரியான தமிழ்த் தட்டச்சுச் செயலியை நிறுவி அதில் பதிவுகளைத் தட்டச்சு செய்வதில் சுணக்கம் ஏற்படுகிறது. அது மட்டுமல்ல எந்த விசைப்பலகை என அவர்கள் தேர்வு செய்து உள்ளிடுவது என்பதில் மிகப்பெரிய குழப்பமும் அவர்களுக்கு வருகிறது. அவர்களது இடர்பாடுகளை போக்க நல்ல செயலி ஒன்று இருக்கிறது.

உங்களது ஆன்ராய்ட் மொபைலில் play store செல்லுங்கள். Google Handwriting input என தட்டச்சுங்கள். இப்போது இந்தச் செயலியை நிறுவுங்கள். இதில் language input ல் தமிழ் எனத் தேர்வு செய்து முயற்சி செய்யுங்கள். 99 விழுக்காடு துல்லியமாக வேலை செய்கிறது. உங்கள் ஆள்காட்டி விரல்கொண்டு எழுத ஆரம்பியுங்கள். கோழி கிறுக்கல் கையெழுத்தைக் கூட அழகாக எழுத்துருவாக TEXT ஆகமாற்றுகிறது. இது ஒருங்குறி எழுத்தாக மாறுவதால் நீங்கள் எங்கு வேண்டுமானாலும் மின்னஞ்சலோ, குறுஞ்செய்தியோ, வாட்ஸ்ஆப் செய்தியோ தமிழில் தங்கு தடையின்றிப் பகிரலாம்.

அது மட்டுமல்ல இது Bilingual அதாவது இருமொழியும் உணர்ந்து அதற்கேற்றார் போல் Text ஆக மாற்றிக் கொடுக்கும். அதாவது தமிழில் எழுதினால் தமிழிலும், ஆங்கிலத்தில் எழுதினால் ஆங்கிலத்திலும் எழுத்துரு அமையும்.

இத்தொழில் நுட்பம் வெகு வேகமாக அனைவரையும் கவருகிறது. விரைவில் தட்டச்சு முறை என்பதே ஒழிந்து விடும் அளவிற்குத் தொழில் நுட்பம் புலிப்பாய்ச்சல் அடைந்துள்ளது.

தமிழ் எல்லாத் தொழில் நுட்பத்திற்கும் அணியமாகி வருகிறது. அது மட்டுமல்ல நாம் எழுதும் எழுத்து அப்படியே ஒருங்குறி எழுத்தாக (Unicode Font) மாறுகிறது. எனவே நீங்கள் மின்னஞ்சலாகவோ, வாட்ஸ்ஆப் மற்றும் குறுஞ்செய்தியாகவோ எப்படி அனுப்பினாலும் தெளிவாகப் படிக்கும் வகையில் அமையும். தமிழில் தமது கருத்துகளைத் தெரிவிக்க விரும்புவோருக்கு மிகச்சிறப்பான செயலி இதுவாகும்

https://youtu.be/D7wnsG6jIcI இந்த இணைப்பினைச் சொடுக்கி காணொளி மூலம் இந்த செயலியை (Apps)-எப்படிப் பயன்படுத்துவது என்பதை நீங்கள் அறியாலாம்

## 2

DAILY HUNT

ஆண்ட்ராய்டு போன் எனில் வாட்ஸ் ஆப் தாண்டிய வேறெந்த செயலியும் இருப்பதாகப் பல பேர் நம்ப மறுக்கிறார்கள். ஆனால் பல பயனுள்ள செயலிகள் நம் ஆண்ட்ராய்டில் பொதிந்து கிடக்கின்றன.

அதில் முக்கியமான செயலி டெய்லி ஹன்ட் Daily Hunt.. இதில் ஒரு கல்லில் நான்கு மாங்காய்.

ஆம்.. நீங்கள் செய்தி வாசிக்கலாம்..

புத்தகம் வாசிக்கலம்,

வேலைக்குப் படிக்கலாம்..

வேலை வாய்ப்பைத் தேடலாம்

ஆனந்த விகடன், நக்கீரன், குங்குமம் உட்பட நடப்பு வாரம், கடந்த வாரம் எனப் புத்தகங்களை டிஜிடல் வெர்சனாக நீங்கள் வாங்கி மொபைலிலேயே படிக்காலம். 25% மேல் தள்ளுபடியில் நிறைய நூல்கள் கிடைக்கின்றன். உங்களிடத்தில் டேப் (TAB) இருந்தால் படிப்பதற்கு இன்னும் வசதியாக இருக்கும்.

அதற்கான தொகை நீங்கள் கிரிடிட் மற்றும் டெபிட் கார்டில் இருந்து கூடச் செலுத்த வேண்டிய தேவையில்லை. உங்களது சிம் கார்டில் இருக்கும் தொகையில் இருந்தே பிடித்துக் கொள்வார்கள். ஒரு ரூபாய்க்குக் கூடப் புத்தகங்கள் கிடைக்கின்றன.

செய்திகளை உடனுக்குடன் அளிக்கும் செயலிகள் பல இருக்கின்றன. செய்திகளைவிட இதில் கூடுதலாக நாம் காண்பது இலவசப் புத்தகங்கள். தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் அளிக்கபட்ட 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் பைசா செலவில்லாமல் டவுன்லோடு செய்து கொள்ளலாம்.

ஆப் லைனில் இருக்கும் போதும் படிக்கலாம். தமிழ் ஆங்கிலம், மலையாளம் என 15 மொழிகளில் இந்த செயலி இயங்குகிறது. இப்போதே தரவிரக்கம் செய்து இலவச நூல்களைப் பெற்று மொபைலில் படித்துப் பாருங்கள்.

புத்தகத்தில் படிக்கும் நேர்த்தி மொபைலில் படிப்பதில் இல்லை என்றாலும் காத்திருக்கும் நேரத்தில் விரும்பியதைப் படிக்கலாமே.

எத்தனை நாள்தான் Forward செய்யும் மொக்கை செய்திகளை நாம் படித்துக்கொண்டு இருப்பது.

https://play.google.com/store/apps/details?id=com.eterno இதில் சொடுக்கி உங்கள் திறன்பேசியில் செயலியை நிறுவித் தொடருங்கள் உங்கள் வாசிப்பை.

புதியன விரும்பு என்ற பாரதியின் வாக்கினைப் பின்தொடர்வோம்.●

Tamil Fortnightly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP

Posted: 1 December 2016

பெறுநர்/To

திரு

அனுப்புனர்/From

கருஞ்சட்டைத் தமிழர்
122/130, என்.டி.ஆர். தெரு,
ரங்கராசபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
பேச : 044 - 42047162

Karunchattai Tamilar
122/130, N.T.R. St.,
Rengarajapuram, Kodambakkam,
Chennai - 600 024.

Owned and published by G. Dinakaran, From 7/8, Peters Colony, Rayapettah, Chennai - 14, and Printed by R.B. Anandababu at Cosmic Printers, 12 Oil Monger Street, Triplicane, Chennai -5. Editor : Suba. Veerapandian